

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருவிடந்தை கிராமத்திற்கு உட்பட்ட கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் Round Table India and Ladies Circle India மற்றும் STS Foundation Public Charitable Trust ஆகிய தொண்டு நிறுவனங்களின் சார்பில் ரூ.123.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய 4 வகுப்பறைகளையும், மாணவர்களுக்கான நவீன சுகாதார வளாகத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், முன்னிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தனர். உடன் நம்ம ஸ்கூல் திட்டத்தின் உறுப்பினர் செயலர் இரா.சுதன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு சார் ஆட்சியர் நாராயண சர்மா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கற்பகம், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சோபனா தங்கம் சுந்தர், Round Table India செயலாளர் திருமதி.சுகந்திஸ்ரீ, நன்கொடையாளர்கள் ராஜகுமார், சுந்தர் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

அருகிலிருந்த தேர்வு மையங்களில் தேர்வு எழுதியவர்களுக்கும் சேர்ந்து 1563 மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கப்படும் என கூறி வழக்கு முடிக்கப்பட்டது. இதனால் மட்டுமே முழு மதிப்பெண்கள் பெற்ற 67 மாணவர்களில், 50 பேர் கருணை மதிப்பெண் அடிப்படையில் முதலிடம் பெற்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினை பலருக்கும் ஏற்பட்டிருந்தாலும், அனைவரும் நீதிமன்றத்தை நாடியிருக்க மாட்டார்கள், புகார் அளித்திருக்க மாட்டார்கள். மீகப் பெரிய விதிமீறல் நடந்துள்ளது. இதனால், தேர்வு எழுதிய 24 லட்சம் மாணவர்களுக்கு பெரும் மன உளைச்சலை இத்தேர்வு முறை ஏற்படுத்தியுள்ளது.

**தேர்வு முறைகேட்டில் கையும் களவுமாக சிக்கியவர்!**

குஜராத் மாநிலம், பன்ச் மகால் மாவட்டம், கோத்ராவில் உள்ள தேர்வு மையத்தில் நடந்த நீட் தேர்வில் பெரிய முறைகேடு நடந்த நாடறிந்ததே. அதாவது, தேர்வு மையத்தில் ஜெய் ஜலராம் பகுதியில் உள்ள பள்ளியைச் சேர்ந்த இயற்பியல் ஆசிரியர் துஷார் பட் என்பவர், தேர்வு மையத்தின் துணை சூப்பிரண்டாக இருந்துள்ளார். அவர், பணியில் உள்ள தேர்வு மையத்தில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களிடம், "நீட் தேர்வில் விடை தெரியாவிட்டால் அதனை எழுதாமல் விட்டு விட சொல்லியும், தேர்வு முடிந்த பிறகு சரியான விடைகளை அவரவர் விடைத்தாளில் எழுதி தரப்படும்" எனக்கூறி ரூ.10 கோடி அளவிற்கு பேரம் பேசி 16 மாணவர்களின் தேர்வு எண் மற்றும் அவர்களது பெயர் கொண்ட விவரத்தை செல்போனில் வைத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து வெளியே செய்தி வரவே அவர் மாட்டிக் கொண்டார். ஆனால், இதில் சந்தேகம் எழுப்புவது என்னவென்றால், முறைகேடு நடைபெற்ற ஒரு இடத்தில் மட்டும் கையும் களவுமாக மாட்டிக் கொண்டார். ஆனால், எத்தனை இடங்களில் மறைமுகமாக முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது யாருக்கு தெரியும்?

நீட் தேர்வு என்பதே சமூகநீதி, சமத்துவம், சமவாய்ப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு பாதிப்பு மற்றும் மாநில உரிமை பறிப்பு போன்ற காரணங்களுக்காக தான் ஆரம்ப நாள் முதலே கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகவும் அழுத்தம் திருத்தமாக நீட் தேர்வை எதிர்த்து வருகிறார். அவரது ஆணைக்கிணங்க, கழக மாணவர் அணி 2017 முதல் பல்வேறு தொடர் போராட்டங்களையும், தமிழ்நாட்டிலுள்ள அத்தனை முற்போக்கு சிந்தனையுள்ள மாணவர் அமைப்புகளை ஒன்றினைத்து, தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மூலம் பல்வேறு விவாதங்கள், கருத்தரங்கம், ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் என அனைத்து அறப்போராட்டங்களையும் கழக மாணவர் அணி முன்னெடுத்து நடத்தி உள்ளது.

கழக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்ற நாள் முதலே இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த நீட் தேர்வை எதிர்த்தும், அதனை தமிழ்நாட்டிலிருந்து நீக்கி, தமிழ்நாட்டு மாணவர்களின் உரிமைகளையும், அவர்கள் இழக்கும் வாய்ப்பை பெற்றுத் தரவும் போராடி வருகிறார். அவரது வழிகாட்டுதலோடு, கழக இளைஞர் அணியுடன் மாணவர் அணியும் இணைந்து மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் உண்ணாநிலை போராட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தி உள்ளது.

**'நீட்' தேர்வை எதிர்த்து போராடும் உதயநிதி ஸ்டாலின்!**

கழக ஆட்சி அமைந்த உடன், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் உயர்மட்ட குழு அமைத்து, நீட் தேர்வினால் ஏற்படும் தாக்கங்களை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்தது தி.மு.க. அந்த குழுவின் பரிந்துரையின் படி, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கக் கோரும் மசோதா, கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் தரப்பிலிருந்து பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, தற்போது வரை காத்திருப்பில் உள்ளது.

**இந்தியா முழுதும் 'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு நீட் தேர்வினை 2017-இல் கொண்டு வந்தது முதல் தி.மு.க. கடுமையாக எதிர்த்து வந்தது. தமிழ்நாட்டிலுள்ள முற்போக்கு சிந்தனை கொண்ட அத்தனை அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்த்து வந்தது. அப்போதெல்லாம் பாசிச பா.ஜ.க. அரசு தி.மு.க. மட்டும் தான் நீட் தேர்வை எதிர்கிறது என்றும்; தமிழ்நாடு மட்டும் தான் நீட் தேர்வை வேண்டாம் என்று சொல்கிறது என்றும் விமர்சித்து வந்தது. தி.மு.க.வின் போராட்டங்களை விளம்பர அரசியல் என்றெல்லாம் சொல்லி குற்றம் சாட்டியது.

அதற்கு பதிலடி தரும் வகையில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு தான் சமூகநீதியின் தொட்டில்! சமவாய்ப்பு, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றிற்கு எதிரான நீட் தேர்வை இந்தியாவில் தமிழ்நாடு தான் முதலில் எதிர்க்கும் என்பதில் எந்த ஐயமில்லை என்று தெரிவித்து, என்றைக்கும் நீட் தேர்வை எதிர்த்தே தீர வேண்டுமென்று சென்னார். ஆனால், இன்று நீட் தேர்வில் உள்ள மோசடிகள் மற்றும் குளறுபிடிகளை உணர்ந்த பா.ஜ.க.வை சேராத அரசியல் கட்சிகள், பிற மாநில அரசுகள், ஏன் ஒட்டுமொத் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு கல்வியாளர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் நீட் தேர்வை கடுமையாக எதிர்க்க தொடங்கி விட்டனர். நீட் தேர்விற்கு எதிராக தமிழ்நாட்டில் தொடங்கிய அதிர்வலைகள் இன்று இந்தியா முழுவதும் பரவியிருப்பதை காண முடிகிறது.

**நீட் தேர்வே ஒரு மோசடி என கழகத் தலைவர் எதிர்த்து வருகிறார்!**

நீட் தேர்வில் நடைபெற்ற மோசடிகளால் இந்தியா முழுவதும் எதிர்ப்பலை கிளம்பியுள்ளது. நீட் தேர்வு என்பதே பெரும் மோசடி என்பதைத் தான் கழகத் தலைவர் அவர்கள் வலியுறுத்தி அதனை கடுமையாக எதிர்த்து வருகிறார்.

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்டமசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டுமென்றும், நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபிடிகளை களைவதற்கு மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், நீட் எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வை நடத்தியே தீருவேன் என்ற எதேச்சதிகாரப் போக்கினை கடைபிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து கழக மாணவர் அணிச் சார்பில் வரும், 24.06.2024 அன்று காலை 09.00 மணியளவில், சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

**கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாணவர் அணியினர் திரண்டிடுவீர்!**

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

> **நீட் தேர்வு என்பதே சமூகநீதி, சமத்துவம், சமவாய்ப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு பாதிப்பு மற்றும் மாநில உரிமை பறிப்பு போன்ற காரணங்களுக்காக தான் ஆரம்ப நாள் முதலே கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகவும் அழுத்தம் திருத்தமாக நீட் தேர்வை எதிர்த்து வருகிறார். அவரது ஆணைக்கிணங்க, கழக மாணவர் அணி 2017 முதல் பல்வேறு தொடர் போராட்டங்களையும், தமிழ்நாட்டிலுள்ள அத்தனை முற்போக்கு சிந்தனையுள்ள மாணவர் அமைப்புகளை ஒன்றினைத்து, தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மூலம் பல்வேறு விவாதங்கள், கருத்தரங்கம், ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் என அனைத்து அறப்போராட்டங்களையும் கழக மாணவர் அணி முன்னெடுத்து நடத்தி உள்ளது.**





தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் ஒரத்தூர் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.30 கோடி மதிப்பில் நலவாழ்வு மைய புதிய கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.06.2024) திறந்து வைத்தார். அருகின் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் (திருவையாறு) துரை சந்திர சேகரன், (பட்டுக்கோட்டை) ந. அண்ணாதுரை மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உஷா புண்ணிய மூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாலகணபதி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கலைவாணி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# மோடியின் ஆட்சிச் சரக்கு இரயில் நகருமா?

**கோ**வை பல்லடத்திலும், நெல்லையிலும் கலந்து கொண்டு பேசிய மோடி, தனது 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியின் சாதனைகள் பற்றிப் பேசுவதை தவிர்த்து விட்டு, ...தேர்தலுக்குப் பின்னர் தி.மு.க.வை நீங்கள் காண முடியாது... என்று கூச்சல் போட்டு பேசினார். ஆனால் பா.ஜ.க. 40 தொகுதியிலும் தமிழ்நாட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டு கல்லறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த நலத்திட்டங்கள் பெரிய அளவில் வெற்றிக்கான முடிவு செய்திருக்கின்றன. தேர்தல் பரப்புரையில் இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வேகம் புயலென உருவெடுத்து வலு சேர்த்திருக்கிறது.

கலைஞருக்குப் பிறகு கழகத்தின் தலைவராகத் தளபதி 2018 ஆகஸ்ட் 28 இல் பொறுப்பேற்றார். அதன் பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களில் எல்லாம் வெற்றிகளைக் குவித்து வருகிறார். 2019 ஏப்ரல் 18 இல் நடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 39 தொகுதிகளில் 38 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அபார வெற்றி பெற்று சாதனை படைத்தார். 2020 ஜனவரி 3ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க கூட்டணி அதிக இடங்களில் வெற்றிக்கனிகளைப் பறித்தது. 2021 மே 2ல் நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி 159 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு தனிப் பெரும்பான்மையாக தி.மு.க. 133 இடங்களைப் பெற்று மே 7 இல் தளபதி தலைமையிலான ஆட்சி உருவாகிடக் காரணமாயிற்று.

2022 பிப்ரவரி 22 அன்று நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மாபெரும் வெற்றியை தி.மு.க. கூட்டணி பெற்றது. 2023 பிப்ரவரி 22 ஆம் தேதி நடைபெற்ற ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் காங்கிரசுக் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெற்றி பெற்று சாதனை படைக்க வைத்தார் தளபதி. தற்போது 2024 ஜூன் 4 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 இடங்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றி மாபெரும் வரலாற்று சாதனை படைத்துள்ளது. இது கலைஞர் அவர்களால் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சாதனையைப் போல், அவரின் திருமகனான தளபதியாரால் வெற்றித் தூண் நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

400 இடங்களுக்கு மேல் பா.ஜ.க வெற்றி பெறும் என்று நாடாளுமன்றத்திலும், தேர்தல் பரப்புரைகளிலும் ஹிட்லராக மாறிக் கொக்கரித்தார் மோடி. அமித்ஷா ஆர்ப்பரிக்கும் அலை கடலாக மாறி ஆட்டம் போட்டார்! இன்று நிலைமை என்ன ஆயிற்று? பா.ஜ.க. ஆட்சிக்குப் பல்லக்கு தூக்க வேண்டிய ஆட்கள் தேவைப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளைப் பார்த்து, இனிமேல் வேண்டுமானால், நாடாளுமன்றப் பார்வையாளர் மாடங்களில்தான் நீங்கள் அமர்வீர்கள் என்று மோடி, அமித்ஷா கூட்டம் கிண்டலாக, கேலியாகக் கூறியது. வெறிபிடித்த ஓநாய் போல ஓலமிட்டுக் கத்திய அந்தக் காட்டுக்கூச்சல் என்னவாயிற்று? இன்று ஆட்சி அமைப்பதற்கு 272 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையென்று இருந்த போதும்; அதனையே எட்ட முடியாமல் 240 பேர் மட்டுமே பா.ஜ.க. பெற்றிருக்கிறதே?.. சந்திரபாபு நாயுடுவின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தெலுங்குத் தேசக் கட்சி, நிதிஷ் குமாரின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய ஜனதா தளக் கட்சி ஆகிய இரு சக்கரங்கள் இருந்தால் தான் மட்டும் போதாது! சிவசேனா (ஷிண்டே ) கட்சி, இராஷ்டிரியா லோக் தளம் போன்ற மற்ற கட்சிகளின் அச்சாணி மசவு எண்ணெய் இருந்தால்தான் மோடி வண்டி இனி நகர முடியும் என்ற பெருத்த அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது அல்லவா! மக்கள் சக்தி எவ்வளவு பெரிய சக்தி என்பது நிரூபித்துக் காட்டி இருக்கிறது! மோடியே வாரணாசியில் வழுக்கி விழுந்து தப்பித் தவறி எழுந்து வந்திருக்கிறார் என்பதுதானே உண்மை!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



2014 தேர்தலில் 282 இடங்களையும், 2019 தேர்தலில் 302 இடங்களையும் தனிப் பெரும்பான்மையாக பா.ஜ.க. பெற்று டெல்லியில் செங்கோட்டையில் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி பீடம் ஏறியது. ஆனால், மக்களின் நம்பிக்கையைத் தகர்த்ததுடன், கடந்த 10 ஆண்டுகளாக நரேந்திரமோடி, மக்களாட்சி தத்துவத்தையே சீர்குலைத்துச் சர்வாதிகாரப் பாதையில் மாற்றிப் பாசிச ஆட்சியாக நடத்தி வந்தார். வருமானவரித்துறை அமலாக்கத்துறை, சி.பி.ஐ., புலனாய்வுத்துறை, தேர்தல் ஆணையம், நீதித்துறை போன்றவற்றில் தலையிட்டு அழுத்தம் கொடுத்து வந்ததுடன், அவற்றின் மூலம் தனது சர்வாதிகாரப் போக்கை மோடி ஆட்சி நடத்தி வந்தது. அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் எல்லாம் அம்பானி, அதானி கும்பல்களுக்குத் தாரைவார்க்கப்பட்டன. இந்திய மக்களின் வரிப்பணம் 0அனைத்தும் களவாணிக் கூட்டமான கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு அள்ளி வழங்கப்பட்டது. அன்றாடங்காய்ச்சிகளான ஏழை. எளிய மக்களின் கல்விக் கடனோ, விவசாயக் கடனோ, மருத்துவக் கடனோ தொழில் கடனோ இரத்து செய்ய முன்வராத மோடி அரசு, வங்கிகளில் சேமிப்புப் பணமாகப் போடப்பட்டிருந்த மக்களின் வேர்வைப்பணத்தைச் சூறையாடி, கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் கடன் பேரில் வழங்கப்பட்ட சுமார் 25,000 இலட்சம் கோடிகளுக்கு மேல் இரத்து செய்யப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவற்றைப் பற்றிக் கவலைப்படவில்லை. தங்களது ஆட்சிச் சாதனைகள் பற்றி விளக்கித் தேர்தல் பிரச்சாரம் செய்ய முன்வராத மோடி அமித்ஷாக்கள், எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக ஆட்சியை பயன்படுத்தினர். தேர்தல் நேரத்தில் டெல்லி முதல்வர் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால், சட்டீஸ்கர் முதல்வர் சிபு சோரன் போன்றோரைச் சிறையில் தள்ளித் தேர்தல் பிரச்சாரம் செய்ய விடாமல் ஈனப்புத்தியைப் பயன்படுத்தியது பா.ஜ.க.

அரசியல் எதிரிகளைப் பழி வாங்கியது; தங்களுக்கு வேண்டாத மாநிலங்களில், பா.ஜ.க.வின் கைத்தடிகளாக நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் மூலம் தொல்லை, தொந்தரவு கொடுத்தது; அமைச்சரவை ஒப்புதல் தந்து, சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள், சட்டங்களுக்கு அனுமதி தராமல் கிடப்பில் போட்டிருப்பது; மாநில உரிமைகளைத் தட்டிப் பறித்துக் காலில் போட்டு மிதித்தது; மாநிலங்களுக்குத் தர வேண்டிய நிதியைத் தராமல் கருவூலக் கதவுகளை மூடிக்கொண்டது. அரசியல் அமைப்புச் சட்ட பிரிவுகளை அவமதித்தது என்பன போன்ற ஆணவப் போக்குடன் நடந்து கொண்டவை தான் கடந்த கால மோடி அரசின் சான்றுகளாகும்!

ஜூன் 9 அன்று பிரதமராக மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பதவி ஏற்றார். அவரது அமைச்சரவை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது. ஏனென்றால், இந்திய வரலாற்றில் முதல்முறையாக பிரதமர் நரேந்திர மோடியின் 3.0 ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கு ஒருவர் கூட இல்லாமல் ஒன்றிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணியில் உள்ள பிற கட்சிகளின் 52 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சி அமைத்துள்ளது. கடந்த 2014 இல் மாநிலங்களவை எம்.பி. ஆக இருந்த நஜ்மா ஹப்துல்லா சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சராக செயல்பட்டார் . 2019 இல் மோடி ஆட்சியில் முக்தார் அப்பாஸ் நக்வி சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டில் கழற்றி விடப்பட்டார். இடையில் முஸ்லிம் அமைச்சர்கள் யாரும் இல்லை. தற்போது மோடி அமைச்சரவையில் ஒருவர் கூட இஸ்லாமியர் அமைச்சர் பொறுப்பு வழங்கப்படவில்லை. தேர்தலில் போட்டியிடவும் பா.ஜ.க. எப்போதும் போல், இஸ்லாமியருக்கு வாய்ப்பும் வழங்க வில்லை. எனினும், மக்களவைத் தேர்தலில் இஸ்லாமியர்கள் 24 பேர் எதிரணியில் உள்ளனர். இதில் இந்தியா கூட்டணியில் மட்டும் 21 பேர் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளனர் என்பது நினைவு கூரத்தக்கது.

மோடி அமைச்சரவையில் மாநிலங்கள் அவை உறுப்பினர் என்ற நிழலில் குளிர் காய்ந்து வரும் நிர்மலா சீதாராமன்கள், ஜெய்சங்கர்களுக்கு ஒரு நீதி; அதே வேளையில், வெயிலிலும் மழையிலும் அலைந்து திரிகிற சூத்திர சாதியினருக்கு ஒரு நீதி என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளரவில்லை. மோடி எட்டு முறை பிரச்சாரம் செய்தும் கடந்த தேர்தலில் விட வாக்குகள் குறைவுதான் என்பதே உண்மை. அண்ணாமலைகள், தமிழிசைகள், வானதி சீனிவாசன்கள் போன்ற வாய்ச்சவடால்கள் இங்கு எடுபடவில்லை. ஒன்றியத்தில் பி.ஜே.பி.க்குத் தனி பெரும்பான்மை கிடைக்காதது ஏன்? என்பதைச்சொல்லி ஆக வேண்டும்! தமிழ்நாட்டில் போட்டியிட்ட 19 மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட 114 சட்டமன்றத் தொகுதிகளில் எந்தத் தொகுதியிலும் பா.ஜ.க. முன்னிலை இல்லை. நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளிலும் மண்ணைக் கவ்வினர் என்பதுதான் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வரலாறு.

மே 7 அன்று நடைபெற்ற மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவுடன் மக்களவை இடங்களில் பாதி இடங்களுக்குத் தேர்தல் முடிந்த நிலையில் முதலில் சொன்ன புள்ளி விவரத்திற்கும் இறுதியில் சொன்ன புள்ளி விவரத்திற்கும் இடையே ஆறு விழுக்காடு உயர்வு இருக்கிறது. வழக்கத்திற்கு மீறிய காலதாமதம் ஏன்? இது எப்படி ஏற்பட்டது? இந்த ஒப்பீடுகள், தரவுகள் மோசடியானவை என்று கூறியும் தேர்தல் ஆணையம் கண்டு கொள்ளவில்லை.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் தில்லியில் பழைய நாடாளுமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற போது, நாடாளுமன்றக் கட்சியின் தலைவராக நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்ட அக் கூட்டத்தில், நரேந்திர மோடி கூட்டத்திற்கு வந்ததுமே அரசியல் அமைப்புச் சட்ட புத்தகத்தைத் தொட்டு நெற்றியிலே வைத்து வணங்கிப் பின்பு இருக்கையிலே அமர்ந்தார். பிரதமர் மோடி இந்த நாடகத்தை மிக அற்புதமாக நடத்தி முடித்திருக்கிறார். இந்தியா கூட்டாட்சி ஜனநாயகம் சமய சார்பின்மை என்கின்ற 42 ஆவது அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவின் சொற்களை ஏற்காத பா.ஜ.க., புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறந்து போதும் அப்பகுதியிலே அரசியல் அமைப்புச் சட்ட முகப்புரையில் உள்ள பகுதிகளை நீக்கிவிட்டுத் தான் கொடுத்திருந்தது. அதைப்போல 2015 ஆம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு தினத்தன்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஒபாமாவுடன் மரியாதை செய்து நின்றபோது, ஒன்றிய அரசின் அணி வகுப்பு வண்டிகளில் விளம்பரம் செய்யப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம் முகப்புரையின் ஒருபகுதியை நீக்கிவிட்டு வந்தது. அது கடும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளானது.

பொதுசிவில் சட்டம், அக்னி வீர், ஒரே நாடு ஒரே தேர்தல், சாதிவாரி கணக்கெடுப்பு போன்ற பா.ஜ.க.வின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்பதை மோடி உணர வேண்டும்.

மோடியின் சர்வாதிகார ஆட்சித் தேருக்கு நடைபெற்ற தேர்தல்கள் மூலம் முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கிறது. இதனையொட்டி கோவை மாநகரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் தளபதி ஸ்டாலின் மற்றும் இந்தியக் கூட்டணி தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் எதிர்கால அரசியலை ஜனநாயகப் பாதையில் கொண்டுசெல்ல வழிகாட்டியிருக்கிறது.